Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 58

செவ்வாய்க்கிழமை
23 ஜனவரி 2024

தை 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இன்னும் எவ்வளவு காலம்தான் உப்பிடி அழுத்தம் குடுங்கோ எண்ட பல்லவியைப் பாடப்போகினமோ தெரியேலை"

## கட்சித் தலைவர் உட்பட ஐவர் சுட்டுக் கொலை!



### தென்னிலங்கையில் பட்டப்பகலில் கொடூரம்

கொழும்பு, ஜன.23
நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கொண்ட அரசியல் கட்சியொன்றின் தலைவர் உட்பட ஐவர் தென்னிலங்கையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை தென்னிலங்கையில் 11

## பொலிஸாரால் உயிரிழப்பு; சம்பவங்கள் அதிகரிப்பு!

### விசாரணை கோருகின்றது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஜன.23
பொலிஸாரின் நடவடிக்கைகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.
அரசாங்கம் இந்த விடயம் தொடர்பாகச் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத் 11

## இலங்கை மீது ஐ.நா. அதிருப்தி

### யுக்திய நடவடிக்கையை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்து

**கொழும்பு, ஜனவரி 23**
**இலங்கையில் முன்னெடுக்கப்படும் 'யுக்திய' என்று அழைக்கப்படும் நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்தி மறுபரிசீலனை செய்யவேண்டும். மனித உரிமைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.** 11

## பதில் பாதுகாப்பு செயலர் நேற்று நியமனம்

கொழும்பு, ஜன.23
பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் திஸாநாயக்க பதில் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுதல் நடைமுறைக்குவரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கமால் குணரத்ன நாடு திரும்பும்வரை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (எ-இ)

## விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.23
நீர்வேலியில் நேற்று மாலை நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
இந்த விபத்துச் சம்பவம் மாசுவன் சந்தியில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளும், ஹைஏஸ் வாகனமும் விபத்துக் 11

## ஒரு வாரத்தில் மட்டும் 13 சிறார்களுக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஜன.23
யாழ்ப்பாணம், சுதுமலை பகுதியில் கடந்த வாரம் 21 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 13 பேர் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களாவர். அதையடுத்து அந்தப் பகுதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. 11



## பதவி விலகினால் தடுக்கவேண்டாம்

### காஞ்சன கடும்பிடி

கொழும்பு, ஜன.23
இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் பதவி விலகல் கடிதங்களை தயக்கமின்றிப் பெற்றுக்கொள்ள இலங்கை மின்சாரசபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது - என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். தனது ருவிற்றர் பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மின்சாரசபை மறுசீரமைப்பு சட்ட வரைவுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய மின்சாரசபை ஊழியர்கள் மீது அமைச்சரின் பணிப்பின்பேரில் உள்ளக 11

## தமிழர்களின் தீர்வுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும்!

### தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன.23
வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்க இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.
இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சந்தோஷ் ஜாவை நேற்றுக் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் சந்தித்தபோதே தமிழ்த் தேசியக் கட்சிகளால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. 11

## போராட்டம் தொடரும்; 23,000 பேரை நீக்குக

### தொழிற்சங்கம் திட்டவட்டம்

கொழும்பு, ஜன.23
மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்ட வரைவுக்கு எதிரான போராட்டம் தொடரும். இந்தப் போராட்டத்தில் சுமார் 23 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். சேவையில் இருந்து இடைநிறுத்துவதாக இருந்தால் 23 ஆயிரம் பேரையும் இடைநிறுத்த முடியுமா என்று ஒன்றிணைந்த மின்சார சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் கேள்வி எழுப்பியுள்ளார்.
அரசியல்வாதிகளின் ஊழல் மோசடியால்தான் 11



## தவறான முடிவெடுத்து இருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23
இருவேறு இடங்களில் தவறான முடிவெடுத்து இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியிலிருந்த அனைவரும் புலிகளைப் போன்றவர்களே!

## தம்மரத்னதேரர் கொதிப்பு

கொழும்பு, ஜன. 23

**நாட்டை மாறிமாறி ஆட்சிசெய்யும் அனைத்து அரசியல் கட்சிகளும் விடுதலைப் புலிகளுக்குச் சமனானவர். ஏனெனில் இவர்கள் அனைவரும் நாட்டை அழிக்கின்றனர் என்று மிஹிந்தலை மகாநாயக்க தேரரான தம்மரத்னதேரர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டை ஆட்சி செய்யப்போகின்றவர் யார்? என்பது எமக்கு முக்கியம் இல்லை. அதேபோன்று எந்தக் கட்சி ஆட்சி செய்யப்போகிறது என்பதும் எமக்குத் தேவையில்லை. எமது நாடே எமக்கு முக்கியம்.

அதனால் தற்போது எங்களுக்குக் கதைத்துக்கொண்டிருக்க நேரம் இல்லை. தற்போது எமக்குச் சிறந்த சிந்தனையும் இலக்கும் உள்ள இளைஞர்களே தேவை.

ஆட்சியாளர்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது அந்தப் பிரதேச மக்கள் அவர்களை விரட்டு கின்றார்கள். மக்கள் தற்போதைய அரசியல்வாதிகளைப் புறக்கணித்துள்ளனர். ஆனால் மீண்டும் அவர்களை ஆட்சியில் ஏற்றும் தவறை மக்கள் இழைக்கக்கூடாது.

அரசியல்வாதிகள் இந்த ஆட்சியின் சுவையை அறிந்தவர்கள்.

அதனால் அவர்கள் பொய் வாக்குறுதிகளை வழங்கி எப்படியாவது ஆட்சிக்கு வரவே முயற்சிப்பார்கள். அதற்கு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது.

இந்த அரசியல் கட்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு சமமானவர்கள். ஏனெனில் இவர்கள் அனைவரும் இந்த நாட்டை அழித்தவர்கள் - என்றார். (ம)



# ராமர் கோயில் நேற்று அயோத்தியில் திறப்பு

கொழும்பு, ஜன. 23
பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் அயோத்தி ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை வெகு விமரிசையாக நேற்று நடந்தேறியது.

அயோத்தி ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை விழாவில் பங்கேற்க உலகின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பிரமுகர்கள் அயோத்திக்கு வந்துள்ளனர்.

நேற்று மு.ப. 11.30 மணியளவில் அயோத்தி ராமர் கோயில் கருவறைக்குள் பிரதமர் நரேந்திர மோடி, ஆர். எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத், உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனந்தி பென் படேல், முதல்வர் யோகி ஆதித்யாநாத் உள்ளிட்டோர் அனுமதிக்கப்பட்டனர். வண்ண வண்ண மலர்களாலும், கண்களைப் பறிக்கும் விலை உயர்ந்த நகைகளாலும் குழந்தை ராமர் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு காட்சி தந்தார்.

இதனைத் தொடர்ந்து பிராண பிரதிஷ்டை விழா தொடங்கியது. கோயில் அர்ச்சகரின் வழிகாட்டுதலின் கீழ் பிரதமர் மோடி, பல்வேறு பூஜைகளைச் செய்தார். ராமர் கோவில் திறப்பு விழாவை முன்னிட்டு வருகைதந்துள்ள பிரமுகர்கள் தங்குவதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பல்லாயிரம் இராணுவத்தினர் பொலிஸார் இணைந்து பாதுகாப்புப் பணிகளிலும் ஈடுபட்டனர். (ம)

# க.பொ.த. சா/த பரீட்சை பெப்.15வரை விண்ணப்பம்

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இன்று முதல் பெப்ரவரி பதினைந்தாம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் இணையவழியிலேயே அனுப்பப்பட வேண்டுமெனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

*www.doenets.lk* அல்லது *www.onlineexams.gov.lk/eic* என்ற இணையத்தள முகவரிகள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் எனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-6)

## வாகனக் கொள்வனவு

# உரிமம் மாற்றத்தின் காலக்கெடு 14 நாள்

கொழும்பு, ஜன. 23
வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்து 14 நாள்களுக்குள் உரிமையை தங்கள் பெயருக்கு மாற்றாவிட்டால் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து ஆணையாளர் நிஷாந்த அனுருத்த தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் உண்மையான பதிவு உரிமையாளரை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

வேறு ஒருவரிடமிருந்து வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தால் அதை உடனடியாக அவரது பெயரில் பதிவு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# நாடாளுமன்றம் கூடுகிறது இன்று

கொழும்பு. ஜன. 23
நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது.

இதன்போது சிவில் அமைப்புகளாலும், எதிர்க்கட்சிகளாலும் கடுமையாக எதிர்க்கப்படும் நிகழ்நிலைக்காப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இவ்வாரம் இன்றும், நாளையும் மாத்திரமே நாடாளுமன்றம் கூடும். நாளை நள்ளிரவு முதல் நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்படும். புதிய கூட்டத்தொடர் பெப்ரவரி 7ஆம் திகதி ஆரம்பமாகும். அன்றையதினம் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையும் இடம்பெறும். (ம-44)

# நாடாளுமன்ற அமர்வு எதற்காக நிறுத்தம்?

## கம்மன்பில கேள்வி

நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்துவது நேரத்தையும், மக்கள் பணத்தையும் வீணடிக்கும் செயலாகும். நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்படுவதன் நோக்கத்தை ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தி, புதிய கூட்டத்தொடருக்கான திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

எனினும், தான் நினைக்கும் நேரங்களில் எல்லாம் நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்துவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. இதற்கு முன்னர் அவ்வாறு நடந்தது கிடையாது. தற்போதைய நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரே பெப்ரவரி மாதம் ஆரம்பமாக உள்ளது. மூன்று ஆண்டுகளுக்குள் 5 கூட்டத்தொடர்கள். இதற்கு முன்னர் 1977ஆம் ஆண்டு முதல் 1988ஆம் ஆண்டுவரை இருந்த நாடாளுமன்றத்திலேயே 5 தடவைகளுக்கு மேல் நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்துவது நேரத்தையும், பணத்தையும் நாசமாக்கும் செயல். நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டதும் நாடாளுமன்றக் குழுக்களும் கலைந்துவிடும். அமைச்சுசார் ஆலோசனைக்குழுக்களும் கலைந்துவிடும். சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியால் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பிக்கப்பட்டு, விருந்துபசாரமும் நடத்தப்படும். எனவே, எதற்காக நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்படுகின்றது. இடைநிறுத்தப்படுவதற்கான உண்மையான நோக்கம் என்னவென்பதை ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் - என்றார். (ம-44)

# ஜனாதிபதி முறையை நீக்கின் ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தல்

## சன்ன ஜயசுமன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருக்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முற்பட்டால் அது ஒற்றையாட்சிக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்று சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினரான சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி முறைமையை நீக்குவது பற்றி யோசனைகள் முன்வைக்கப்படுவது, தேர்தலை இழுத்தடிப்பதற்கான நகர்வே.

நாட்டில் உறுதித்தன்மை ஏற்பட்ட பின்னரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மறுசீரமைப்பு பற்றிச் சிந்திக்க வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க முற்பட்டால் ஒற்றையாட்சிக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# தேர்தல் வேளையில் அரசு தந்திரோபாயம்

## மத்தும பண்டார சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 23
தேர்தல் நெருங்கும் வேளையில் அரசியல் கட்சிகள் மற்றும் ஜனநாயகத்தை ஒடுக்கும் வகையில் - எதிர்க்கட்சிகளை வேட்டையாடும் நோக்கில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டவரைவுக்கெதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அதன்பின் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் பயங்கரவாதம் இல்லை, பயங்கரவாதி என்றால் யாரென அந்தச் சட்டவரைவில் விளக்கப்படவில்லை. எவரை வேண்டுமானாலும் கைது செய்யமுடியும் என்ற நிலையே காணப்படுகின்றது.

அரசியல் கட்சிகள் மற்றும் ஜனநாயகத்தை ஒடுக்கும் வகையிலேயே தேர்தல் நெருங்கும்வேளை இந்தச் சட்டவரைவு கொண்டுவரப்பட்டுள்ளது - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போகம் அழிவு: இழப்பீடுகள் தேவை!

## கிளிநொச்சி விவசாயிகள் ஜனாதிபதிக்கு மனு

**யாழ்ப்பாணம், ஜன. 23**
**காலநிலை மாற்றம் மற்றும் நோய்த்தாக்கங்களால் பெரும்போக நெற்செய்கையின் அறுவடை வீழ்ச்சியுற்றுள்ளது. இந்தப் பாதிப்புக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்கவேண்டும் என்று இரணைமடு கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனத்தால் ஜனாதிபதிக்கு மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பான அந்த மனுவில் உள்ளதாவது:-
கிளிநொச்சி மாவட்டத்தில் 72 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட காலபோக செய்கையானது அதிக மழை மற்றும் நோய்த்தாக்கம் காரணமாக பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. கடந்த காலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 1.5 மெற்றிக் தொன் நெல்லை அறுவடை செய்திருந்தோம். இம்முறை 0.5 மெற்றிக் தொன் மாத்திரமே அறுவடை செய்யப்பட்டுள்ளது. செய்கைக்காக ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவிடப்பட்ட நிலையில் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபாவரையில் நட்டம் ஏற்பட்டுள்ளது. எனவே வாழ்வாதாரப் பாதிப்பை கருத்திலெடுத்து பயிரழிவுக்குரிய நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-113)



## பொலிஸார் எனக்கூறி பணம் பறிக்கும் குழு!

### பொதுமக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 23
தம்மைப் பொலிஸார் எனக்கூறி தொலைபேசி அழைப்பு எடுத்து பணம் பறிக்கும் கும்பல்கள் நாடளாவிய ரீதியில் செயற்பட்டு வருகின்றன என்றும் இது தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த கும்பல்கள் தொடர்பான புலன்விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப-6)

## நிகழ்நிலை காப்புச் சட்டம் எம் ஆட்சியில் நீக்கப்படும்

### ஐ.ம.ச. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23
ஊழல்களை அம்பலப்படுத்தும், குற்றங்களை வெளிப்படுத்தும் நபர்களை இலக்குவைத்தே உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு கொண்டுவரப்படுகிறது. இந்தச் சட்டவரைவுக்கு எமது ஆட்சியில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.
-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்று அதிகாரி அஜித் பி பெரேரா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இது ஏற்புடைய சட்டவரைவு அல்ல என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசாங்கம் தமது இருப்பை காப்பதற்கான நகர்வாகவே இது அமைந்துள்ளது.
கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் முதல் வேலையாக அந்தச் சட்டம் மீளப் பெறப்படும் - என்றார். (ச-44)

யாழ்ப்பாணத்தில்

## இவ்வருடம் முழுவதும் டெங்குக் கட்டுப்பாடு!



கொழும்பு, ஜன. 23
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ்வருடம் முழுவதும் டெங்குக் கட்டுப்பாட்டுச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.
யாழ்ப்பாணத்தைத் தவிர கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை வருடம் முழுவதும் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)



## சம்பந்தனைச் சந்தித்து ஆசிபெற்றார் சிறீதரன்!

கொழும்பு, ஜன. 23
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்வான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை நேரில் சந்தித்து ஆசிபெற்றார்.
இந்தச் சந்திப்பு நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பில் அமைந்துள்ள சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெற்றது. (ச-[illegible])



# தினம் தெரியுமோ?

**நெடுகலும் குண்டுச் சட்டிக்குள்ளேயே பட்சி பறந்து கொண்டிருக்காமல் இண்டைக்கு ஒரு வித்தியாசத்துக்கு மலையகப் பக்கமும் பறந்து பாத்தம். அங்க இன்னமும் தைப்பொங்கல் கொண்டாட்டம் முடிவுக்கு வரேலை. தங்கட பவரைக் காட்டுறதுக்காக தொண்டமான் குடும்பத்துக்க நீ பெரிசா? நான் பெரிசா? எண்டு பெரும் போட்டியே நடக்குது போல.**

**கிட்டடியில கிழக்கின்ர ஆளுநரா இருக்கிற செந்தில் தொண்டமான், திருகோணமலையில ஒரு பொங்கல் விழாவை நடத்தினவர். அதில 1500 பேரை ஒரு கிரவுண்டுக்க டான்ஸ் ஆட வைச்சு, இலங்கையிலையே இப்பிடியொரு பெரிய டான்ஸ் புரோக்கிராம் நடக்கவேயில்லை எண்டு எல்லாரும் மூக்கில விரலை வைச்சினம் எண்டுதானே சொல்லிப்பெருமைப்பட்டார். அதைவிட தமிழரின்ர பாரம்பரியம் எண்டு சொல்லி அதேபொங்கல் விழாவில, இந்தியாவில நடக்கிற ஜல்லிக்கட்டை நடத்தினார். அந்த ஜல்லிக்கட்டை, இந்தியாவில இருக்கிற நாம்பன் மாடுகள் பார்த்திருந்தால், எங்கையாவது ஆத்திலையோ குளத்திலையோ பாய்ஞ்சிருக்குங்கள். ஜல்லிக்கட்டு வரலாற்றிலையே நாணயக் கயிறு குத்தின மாடுகளை அடக்கினது இதுதான் முதல்முறையா இருக்கும். நாணயக்கயிறு குத்தின, காய்ஞ்சு வாடி வதனங்கின மாடுகளை பத்துவயசுப் பெடியன் கூட, ஒரு கையால பிடிச்சுப் போடலாம். அப்பிடி 'சாகிறன் சங்கரா' எண்டிருக்கிற மாடுகளை, கொண்டந்து இஞ்சையுள்ள ஆக்களை ஜல்லிக்கட்டு எண்டு பேய்க்காட்டி, "அலப்பறை கிளப்பிறம்" எண்டு, செந்தில் தொண்டமான் மேடைக்கு வரேக்க பாட்டெல்லாம் போட்டு, பெரும் கூத்து நடந்தது.**

**சரி, ஏதோ ஜல்லிக்கட்டு, பரதநாட்டியம் எண்டு ஓரளவுக்கு தமிழ்க் கலாசாரத்தில இருக்கிற விசயங்களை வைச்சு இந்தப் பொங்கல் விழா நடந்ததால, கனக்க விமர்சனங்கள் இருந்தாலும் கொஞ்சம் நல்ல பேரும் செந்தில் தொண்டமானுக்கு கிடைக்கத்தான் செய்தது. "அதெப்பிடி செந்தில் தொண்டமானுக்கு நல்லபேர் கிடைக்கலாம்?" எண்டு அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு ஈகோ வந்திட்டுது போல. அதால அவரும் தன்ர பங்குக்கு ஒரு பொங்கல் விழாவை முந்தநாள் ஹட்டனில கொண்டாடி இருக்கிறார். செந்தில் இந்தியாவில இருந்து ஜல்லிக்கட்டுக்காரரை கொண்டந்த மாதிரி, ஜீவன் இந்தியாவில இருந்து 4 நடிகையளை பொங்கல் விழாவுக்கு கூட்டிக்கொண்டந்திருக்கிறார். ஒரு நடிகையைக் கூட்டிக்கொண்டு வாறதெண்டால் லேசுப்பட்ட விசயமில்லை. அவை வாறதுக்கே இருபது, இருபத்தைஞ்சு லட்சமாவது கேப்பினம். அதவிட பிளைட் ரிக்கெற், தங்குமிடம், சாப்பாடு எண்டு எப்பிடியும் இந்த நாலு நடிகைமாரையும் கூட்டிக்கொண்டு வாறதுக்கு ஒண்டரைக் கோடிக்கு கிட்ட செலவழிச்சிருக்கோனும். அப்பிடியெல்லாம் காசைக் கொட்டி எதுக்கு உந்த நடிகைமாரை இஞ்ச கூட்டியரோனும்? எண்டு அங்கத்தைச் சனங்கள் கேக்கினம்.**

**இன்னமும் மலையகச் சனங்கள் வேலைக் கேத்த சம்பளம் தரச்சொல்லி, பத்துப் பதினைஞ்சு வருசமாப் போராடிக்கொண்டிருக்கினம், ஆனால் இன்னும் அது கிடைச்சபாடில்லை. அதால கால்வயிறு, அரைவயிறு எண்டுதான் அவை சாப்பிடமுடியுது. அவைக்கு இருக்க ஒழுங்கான வீடுகள் இல்லை. நல்ல ஆஸ்பத்திரி இல்லை. சீரான பள்ளிக்கூடங்கள் இல்லை. அவ்வளவு ஏன், கன குடும்பங்களுக்கு மலசலகூடம் இன்னும் இல்லை. அதுகளையெல்லாம் உந்த நடிகைமாரைக் கூட்டியந்த காசுக்கு கொஞ்சமெண்டாலும் கட்டிக் குடுத்திருக்கலாமே. சனங்கள் சாப்பாடுக்கே அழேக்க, தொண்டமான் குடும்பம் படம் காட்ட அலையினம் கண்டியளோ.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியா செல்கிறார் புடின்!

மொஸ்கோ, ஜன. 23
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின், விரைவில் வடகொரியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காக அவருடைய பயணத் திகதி இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை.
வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இருதரப்பு வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.
இதன் தொடர்ச்சியாக வடகொரிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் சோ சொன் கடந்த வாரம் ரஷ்யாவுக்குச் சென்று இருதரப்புச் சந்திப்புகளில் ஈடுபட்டார். இந்த இரண்டு சுற்றுப் பயணங்களின்போதும் வடகொரியாவுக்குப் புடின் பயணம் மேற்கொள்ளவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது.
இதேவேளை, கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்கத் தலையீடுகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் வல்லாதிக்க நாடொன்றின் துணை வடகொரியாவுக்கும் தேவைப்படுகின்றது. இவ்வாறானதொரு நிலையில் இந்தச் சுற்றுப்பயணம் இரு தரப்புக்கும் முக்கியமானதாகவே கருதப்படுகின்றது. (ம-இ)

# ஹமாஸ் அமைப்பு பலமிழக்கவில்லை

## அமெரிக்கா எச்சரிக்கை

**காஸா, ஜன. 23**
**காஸாவில் இஸ்ரேல் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்துகின்றபோதிலும், ஹமாஸ் அமைப்பு வலுவிழக்கவில்லை என்று அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.**

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் ஹமாஸ் அத்துமீறித் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து கடந்த மூன்று மாதங்களாக ஹமாஸ் அமைப்புக்கு எதிராக காஸாவில் பல முனைத் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தி வருகின்றது.
இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் கட்டமைப்புகள் மற்றும் ஆயுதங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்ற நிலையில், ஹமாஸ் இன்னமும் பலமிழக்கவில்லை. அது வலுவாகவே இருக்கின்றது என்று அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.
இன்னும் பல மாதங்கள் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தும் அளவுக்கு ஹமாஸ் அமைப்பு பலத்துடன் உள்ளது. இஸ்ரேலின் தாக்குதல்களால் 20 தொடக்கம் 25 வீதமான போராளிகளை மட்டுமே ஹமாஸ் அமைப்பு இழந்துள்ளது. அந்த அமைப்பு தனது தந்திரங்களை மாற்றியமைத்து தொடர்ந்தும் இயங்குகின்றது என்று அந்தப் புலனாய்வு அமைப்புகளின் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)



# அகதிகளை வெளியேற்றாதீர்

## ஜேர்மனி மக்கள் போராட்டம்

பெர்லின், ஜன. 23
ஜேர்மனிலிருந்து அகதிகள் எவரும் வெளியேற்றப்படக்கூடாது என்று வலியுறுத்தி பல்லாயிரம் பொதுமக்கள் இணைந்து நாடெங்கிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.
ஜேர்மனின் கடும் போக்கு வலதுசாரிகளின் புரட்சிகர கட்சியினர், கடும் போக்கு இடதுசாரி செயற்பாட்டாளர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்தி, குடியேற்றவாசிகள், அகதிகள் மற்றும் வெளிநாட்டவர்களை மொத்தமாக வெளியேற்றும் திட்டம் குறித்து கலந்துரையாடியுள்ளனர் என்ற தகவல்கள் ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கைக்கு எதிராக பல்லாயிரம் பொதுமக்கள் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.
ஜேர்மனியில் நேற்றும், நேற்றுமுன்தினமும் சுமார் 90 இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் பொதுமக்களால் நடத்தப்பட்டுள்ளன. அனைத்துப் பேரணிகளிலும் சேர்ந்து சுமார் ஒரு லட்சம் மக்கள் பங்கெடுத்துள்ளனர்.
ஜேர்மனியை நம்பிவந்த அகதிகள், குடியேறிகளை விரட்டும் இந்தத் திட்டம் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் வலியுறுத்தினார்கள். (ம-இ)

# பருவநிலை மாற்றம்; திணறும் அமெரிக்கா

நியூயோர்க், ஜன. 23
கடந்த ஒரு வாரத்தில் மட்டும், பருவநிலை மாற்றங்களால் அமெரிக்காவில் 89 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். பல மாநிலங்களில் கடுமையான பனிப்பொழிவுடன் பனிப்புயலும் தாக்கி மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கியுள்ளது.
கடும் பனிப்பொழிவால் அமெரிக்காவின் டென்னிசி மாநிலத்தில் 25 பேரும், ஒரேகான் மாநிலத்தில் 16 பேரும் உயிரிழந்த நிலையில் அங்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# இராணுவ உபகரணங்கள் உக்ரைனில் பற்றாக்குறை

**கீவ், ஜன. 23**
**ரஷ்யத் தாக்குதல்களைச் சமாளிக்கவும், எதிர்த்தாக்குதல்களை நடத்தவும் ஏதுவாக மேற்கத்தேய நாடுகளிடமிருந்து இராணுவ உதவிகளை எதிர்பார்ப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.**
இராணுவ உதவி கோரலுக்காக அண்மைக்காலமாக உலக நாடுகள் பலவற்றுக்கு ஷெலன்ஸ்கி சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அதன் தொடர்ச்சியாகவே இந்த அறிப்பும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அவுஸ்திரேலியாவில் தீவிர வெப்ப அலை!

சிட்னி, ஜன. 23
அவுஸ்திரேலியாவின் மேற்குப் பகுதிகளில் நேற்றுத் தீவிர வெப்ப அலை ஏற்பட்டுள்ளது. எல் நினோ பாதிப்புக்கு மத்தியில், இந்த வெப்ப அலைகளானவை காட்டுத்தீயை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தைக் கொண்டிருந்தன என்று அவுஸ்திரேலிய வானிலை ஆய்வு மையத்தினர் எச்சரித்துள்ளனர்.
பெர்த் வட்டாரத்தில் ஜனவரி மாதம் பதிவாகும் வெப்பநிலையைக் காட்டிலும் 7 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது. (ம)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில நுட்பங்களை கற்று கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அணி சேர்க்கும் அவகாசம்!


பலசாலியா? மூளைசாலியா? என்றால் நிச்சயம் ஆபத்தானவன் மூளைசாலிதான். ஏனெனில் பலசாலி தன் பலத்தைத் திரட்டித்தான் வினையாற்றுவான். ஆனால், மூளைசாலியோ அவ்வாறில்லை. அவனின் அடுத்த நகர்வு எவ்வாறிருக்கும்? எதை மையப்படுத்தியதாக அவன் செயற்படப் போகின்றான்? என்பதெல்லாம் கணிப்புக்கு அப்பாற்பட்ட விடயங்கள். இந்தச் சித்தாந்தத்துடன், இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச நிகழ்ச்சிநிரல் தற்போது இறுகத் தொடர்புறுகின்றது. இறுதிப்போரில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் போர்க்குற்றங்களுக்கான 'பொறுப்புக்கூறல்' தொடர்பில், 'மூளைசாலியான' ரணில், எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளைக் கருத்திற்கொண்டு நகர ஆரம்பித்திருக்கின்றாரா? என்ற ஐயப்பாடு அண்மைக்காலமாக வலுவாகவே எழுகின்றது.

உகண்டாவின் தலைநகர் கம்பலாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டுள்ள ரணில், அங்கு உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்து இருதரப்புப் பேச்சுகளையும் நடத்தியிருக்கின்றார். மனித உரிமைகளைப் பேணுவதில் தற்போது உலகிலுள்ள வெகுசில தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி சிறில் ரமபோசா தொடக்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இதுவரை இலங்கையை எதிர்த்துக் குரலெழுப்பாத தன்சானியா, பஹமாஸ், எத்தியோப்பியா, பெனின் குடியரசு உள்ளடங்கலாக பல நாடுகளின் தலைவர்கள்வரை ரணில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள தலைவர்களின் பட்டியல் மிக நீட்சியானது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக இதுவரை முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளைத் துடைத்தெறிவதற்கு இலங்கை எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அத்தனையும் தோல்வியே கண்டன. இதுவரை இலங்கையைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கு சர்வதேசத்தால் முடியாவிட்டாலும், மறுமுனையில் தீர்மானங்கள் நீர்த்துப்போகச் செய்யப்படாமல் உயிர்ப்புடன் இருக்கும் பின்னணியில் இதை இலங்கையின் தோல்வி அல்லது பின்னடைவு என்றும்கூட கொள்ளலாம். ஆதலால், இந்த வருடம் வரவிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்கள் இரு தரப்புக்கும் மிகமிக முக்கியமானவை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் உகண்டாவில் வைத்து அணிசேரா நாடுகளின் தலைவர்களுடன் –ஆபிரிக்கத் தலைவர்களுடன் ரணில் மேற்கொண்டுள்ள பேச்சுகள், அவர்களை 'தன் அணியாக்க' ரணில் மேற்கொள்ளும் வியூகமா என்று ஐயப்பட வேண்டியிருக்கின்றது.


'தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்பார்கள்'. நீதி எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு குற்றவாளி தப்பித்துச் செல்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கவே செய்கின்றது. ஆதலால், ரணிலின் இந்த நகர்வு உண்மையில் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை மையப்படுத்தியதாகத்தான் இருக்கின்றது என்றால், இங்கே குற்றவாளிக் கூண்டில் நிற்பது கொழும்பல்ல மாறாக சர்வதேசம். போர் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் நெருங்குகின்ற நிலையில், போரில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிட்டுவதற்கான பொறிமுறைகளின் பூர்வாங்க நடவடிக்கைகள்கூட இன்னும் ஆத்மார்த்தமாக ஆரம்பிக்கப்படாமல் இருப்பது ஐ.நா.வின் அப்பட்டத் தோல்வி. ஐக்கியநாடுகள்சபை தன்நிலைப்பாட்டில் உறுதியாக நின்றிருந்தால், அழுத்தத்தை உரியவகையில் கொடுத்திருந்தால் இன்று தப்பித்தோடும் வாய்ப்பை கொழும்பு தேடிக்கொண்டிருக்க சந்தர்ப்பமில்லை.

**உண்மையில் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக காலாகாலமாக வாக்களித்து இலங்கையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா கூட்டணியை விடவும் ஆபத்தானது ஐ.நா.வின் அவகாசம்தான். ஒரு நீதிப்பொறிமுறையில் எதிராளி தரப்பு நியாயத்தை வெளிப்படுத்துவதற்கான அவகாசங்களும், அந்தத் தரப்புகளுக்கான சந்தர்ப்பங்களும் அவசியம்தான். ஆனால், இலங்கைக்கு வழங்கப்பட்ட அவகாசங்கள், சிறுபான்மை மக்கள் அச்சப்படும் தன்மையின.**



# ஆட்சிமாற்றம் நிச்சயம்

## அநுரகுமார வலியுறுத்து



**கொழும்பு, ஜன. 23**
**எதிர்வரும் தேர்தல்களின்போது ஆட்சிமாற்றம் நிச்சயம் இடம்பெறும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ஆட்சிமாற்றத்தின் அவசியத்தை ஜே.வி.பி.யுடன் இணைந்து இன்று மக்களும் உணர ஆரம்பித்துள்ளனர். இந்த ஆண்டில் இடம்பெறும் தேர்தல்களில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் மக்கள் உறுதியாகவுள்ளனர். தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்றுவது வெறும் அரசியல் வேலைத்திட்டம் அல்ல, மாறாக அதுவொரு தேசிய செயற்பாடு. இன்று தாம் நாட்டைக் கட்டியெழுப்பியுள்ளதாகக் கூறுவது நகைப்புக்குரியது. எந்தத் தேர்தலை முதலில் நடத்தினாலும் அதை ஏற்றுக்கொள்ள ஜே.வி.பி.யினர் தயார் - என்றார். (ம)

# மைத்திரி மகள் வீட்டில் திருட்டு

கொழும்பு, ஜன. 23
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் மகளின் வீடு உடைக்கப்பட்டு, 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் திருடப்பட்டுள்ளன எனத் தலங்கம பொலிஸார் தெரிவித்தனர். பத்தரமுல்ல விக்கிரமசிங்க புரவிலுள்ள இரண்டு மாடி வீடே உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

# யுக்திய நாடகம்!



கொழும்பு, ஜன. 23
நாடுமுழுவதும் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் 'யுக்திய நடவடிக்கை' என்பது நாடகம் என நிரூபிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா குற்றஞ்சுமத்தியுள்ளார்.
பெலியத்தவில் நேற்றுக் காலை அரசியல் கட்சித் தலைவர் உட்பட 5 பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில் அவர் இதனைக் கூறியுள்ளார். பொலிஸார் கடமைகளைத் திறம்படச் செய்திருந்தால் பெரிய அளவிலான இந்த நடவடிக்கை தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# பலஸ்தீனர்கள் கொல்லப்படுவதை எதிர்க்கின்றேன்

**ஜனாதிபதி ரணில் உறுதிபடத் தெரிவிப்பு**

கம்பலா, ஜன. 23
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் ரியாட் மல்கிக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.
உகண்டாவின் கம்பாலா நகரில் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு அண்மையில் இடம்பெற்றுவரும் நிலையிலேயே இந்தச் சந்திப்பும் இடம்பெற்றுள்ளது. இதன்போது இஸ்ரேல் ஹமாஸ் மோதலில் பலஸ்தீனத்தில் உள்ள அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை ஏற்க முடியாது என்பதை உறுதியுடன் வலியுறுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ய)

**நாளை**

24.01.2024
**புதன்கிழமை**
**தை 10**
சுபநேரம் : 05.06 - 06.36
ராகுகாலம் : 12.36 - 02.06


**நாளொரு நல்வார்த்தை**

**வஞ்சகம் நிறைந்த காலத்தில் உண்மையைச் சொல்வது ஒரு புரட்சிகரமான செயல்.**
**–ஜோர்ஜ் ஆர்வெல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை லயன்ஸ் கழகம், சங்கானை வர்த்தக சங்கம் மற்றும் சங்கானை பட்டன அபிவிருத்திச் சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க பொதுமக்களின் பயன்பாட்டுக்காக, சங்கானை மைந்தனான, சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீதரனின் நிதிப்பங்களிப்பால் ஒரு கோடி 70 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவத் தொகுதி சங்கானை போதனா மருத்துவமனைக்கு அண்மையில் வழங்கப்பட்டது. (ப-23)



யாழ்ப்பாணம், சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தச் சொற்பொழிவு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்றது. ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்வில் கலந்துகொண்டு சொற்பொழிவை ஆற்றினார்.

நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பொருண்மியம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ப-66)



பிரித்தானியா டெவன் கோன்வல் மாவட்டத்தின் பிளைமவுத் நகரில் தைப்பொங்கல் விழா கடந்த சனிக்கிழமை 20ஆம் திகதி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (ப-159)



கிளிநொச்சி சமூக சேவைகள் அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழில் முயற்சியாளர்களுக்கு சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

பூநகரி, பல்லவராயன்கட்டு, பளை, தர்மக்கேணி, வலைப்பாடு, நாச்சிக்குடா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 11 தலைமைத்துவக் குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ச-113)



யாழ்ப்பாணம், இணுவில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. (ப-66)

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் வாழ்வோதய மையத்தில் பொங்கல் விழாக் கொண்டாட்டம் அண்மையில் இடம்பெற்றது. (ப-213)





# கிராம அமைப்புகளுக்கு கதிரைகள் வழங்கல்

மன்னார், ஜன.23

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராம மட்ட அமைப்புகளுக்கு முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை மாந்தை மேற்குப் பிரதேசத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைத்தார்.

இதன் போது முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட கிராம மட்ட அமைப்புகளுக்கு ஒரு தொகுதி கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-56)



கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், சிறுவர் கழகமும் இணைந்து கொடிகாமம் ஐயனார் கோவில் முன்றிலில் பொங்கல் விழாவை அண்மையில் முன்னெடுத்தன. 'வேல்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வை. ஜெகதாஸ் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சேவை மேம்பாட்டுக்கு செயற்கை நுண்ணறிவு தேவை

## கொழும்பு பல்கலை பேராசிரியர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 23

சுகாதாரத்துறையின் பணிகளுக்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தவேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. செயற்கை நுண் ணறிவின் பயன்பாடு மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்த உதவும்.

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இந்திககருணாதிலக்கசுட்டிக்காட்டியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவால் சுகா தாரத்துறைக்கும் மருத்துவக் கல்விக்கும் பல நன்மைகள் கிடைக்கப் பெறும். இது புறக்கணிக்கக்கூடிய ஒன்றல்ல. நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க 'ரோபோடிக்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம்.

தொலைதூரப் பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கசெயற்கைநுண்ணறிவின் கீழ் நாங்கள் சேவைகளை வழங்க முடியும்.

அதற்கமைய இலங்கையில் சுகாதார சேவைகள் மற்றும் அதுதொடர்பான சேவைகளில் செயற்கை நுண்ணறிவைப்பயன்படுத்துவதற்குத்திட்டங்களை நாம் தயாரித்துள்ளோம்- என்றார். (ச-இ)



சுழிபுரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக அரங்கில் மூத்த சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் மஹாகவி உருத்திரமூர்த்தியின் ஆளுமைப் பகிர்வும் கலந்துரையாடலும், பிஞ்சுப் பாடல்கள் அரங்காற்றுகையும் அண்மையில் நடைபெற்றது. (ப-66)



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டு கிராமத்தின் மைந்தன் அருட்தந்தை றமேஸ் (சதீஸ் குமார்) அடிகளாருக்கு தேசபந்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாடு மண்டபத்தில், சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இந்த நிகழ்வுகள் இடம் பெற்றன. (ப-27)



# மரநடுகைத் திட்டம் ஆரம்பித்து வைப்பு!

அராலி, ஜன. 23

அராலி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொன்னாலை வீதியில் மரநடுகைத் திட்டம் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் சுற்றுச்சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராம அலுவலர், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் கடந்த வாரம் சிறப்புற இடம்பெற்றது. (ச-17)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை:** மானிப்பாய் கிராம உப அலுவலகம்.

**விண்ணப்பதாரரின் பெயர்:** சுரேஸ் ஆனந் அனிதா

**முகவரி: ஆதன இல:** 127/5, **வீதி:** பிப்பிலி வீதி, **வட்டாரம்:** 09 வட்டாரம் 09 பிப்பிலி வீதி, வீதி ஆதன இலக்கம் 127/5 இல் அமைதுள்ள, உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை கொத்தல் நிலானையும் மறுபிரிவுகளும் எனும் பெயருள்ள நிலப்பரப்பு 08 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் கேணியடி கொக்குவிலை ஐ சேர்ந்த துரைரத்தினம் தர்மேந்திரா ஆகியவர்களால் "இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே" என பிரசித்த நொந்தாரிசு இ.வசந்தசேனன் அவர்களால் எழுதப்பட்ட 6937 ம் இலக்க 2005.09.04 ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் அவர்களால் எழுதப்பட்ட 6938 ம் இலக்க 2005.09.04ம் திகதிய உறுதி மூலம் சுரேஸ் ஆனந் பெண் அணிதா என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் பி.புஸ்பராசா அவர்களால் வரையப்பட்ட 11634 ம் இலக்க 29.06.2022 ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் 08 நிலப்பரப்பு கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| வடக்கு | - | இல.2 சுட்டிய பாகம் |
| கிழக்கு | - | விசுவரத்தினம் பெண் கமலாதேவியின் ஆதனம் |
| தெற்கு | - | எம்.சிவநாயகத்தினதும் மறு பேரினதும் ஆதனம் |
| மேற்கு | - | இல.3.5 சுட்டிய பாகங்கள் |

மேற்குறித்த ஆதனத்தை சுரேஸ் ஆனந் பெண் அனிதா என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிகாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பத்தாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(CS 53635) V-1

# சேவை நலன் பாராட்டு



திருமதி
**அருட்சோதி மகேஸ்வரன்** (B.Ed)
(ஆசிரியர்)
கிளி / கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்

மணிவிழாக் கண்டு மகிழ்வுறும் நாயகியே
மாண்புறு ஆசிரிய சேவையை
கிளி மண்ணில் மகிமையுடன் ஆற்றி
கிளி இந்துவில் ஓய்வுபெறும் சேவகியே
வாழ்த்துகின்றோம் வாழ்த்துகின்றோம்

அன்பாக பேசி அனைவரையும்
அரவணைத்து இங்கிதமாய் செயலாற்றி
ஊரவர்கள் போற்ற உத்தமியாய்
ஊன்று கோலாய் இருக்கின்ற ஆசானே
வாழ்க வளமுடன் பல்லாண்டு.

அகவை அறுபதிலும் அயராது உங்கள் பணி
அன்பு பாராட்டி அகிலம் போற்ற
குடும்பத்தார் உற்றார் உறவினருடன்
குதூகலமாய் வாழ வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

**கற்பித்த பாடசாலைகள்**

| | | |
|---|---|---|
| 1. கிளி / கனகபுரம் ம.வி. | - | 1990 - 1995 |
| 2. கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம் | - | 1995 - 1997 |
| 3. கிளி / ஆனைவிழுந்தான் குளம் | - | 1997 - 2000 |
| 4. கிளி / கிளிநொச்சி ம.வி | - | 2000 - 2008 |
| 5. கிளி / செல்வாநகர் அ.த.க.பா. | - | 2008 - 2010 |
| 6. கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம் | - | 2010 - 2015 |
| 7. கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரி | - | 2015 - 2016 |
| 7. கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம் | - | 2016 - 2024 |

**பாடசாலைச் சமூகம்**
**கிளி / கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்வனவு செய்யப்படும்

நெல் கொள்வனவு செய்யப்படும்

077 634 1504

## கொள்வனவு

நெல், தேங்காய், கொப்பறா, தானியங்கள் என்பன கொள்வனவு செய்யப்படும் (வியாபாரிகள் விரும்பத்தக்கது.

077 772 2215

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒரு வீட்டின் கூரைகள், யன்னல்கள், கதவுகள் போன்ற மரத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.
**(கோண்டாவில் கிழக்கு)**

தொடர்பு: **076 320 0039**

## அச்சகம் நடத்த இடம் வாடகைக்கு உண்டு

யாழ்நகரப் பகுதியில் பஸ் தரிப்பிடத்திற்கும் வைத்தியசாலைக்கும் முன்பாக அச்சகம் நடத்துவதற்கு தேவையான இடம் வாடகைக்கு உண்டு. விரும்பியவர்கள் கீழ் வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்

077 314 4734 / 077 505 9909

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் **திருமதி செ. வட்சலாகுமாரியின்** பாசமிகு மாமியார் **தவமணி சிவஞானம்** அவர்கள் கடந்த 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம் - யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி**

## அறை வாடகைக்கு

யாழ்நகருக்கு அருகில் அமைந்துள்ள வீட்டில் உள்ள குளியலறை வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு விடப்படும்.
தாதியர்கள் விரும்பத்தக்கது.

077 270 4737

## கட்டிடம் வாடகைக்கு

யாழ்.வைத்தியசாலை வீதியில் கட்டிடம் வாடகைக்கு உண்டு. கடைகள்/அலுவலகங்களுக்கு ஏற்றது.

தொடர்பு: **077 162 0626**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**பாலகிருஷ்னன் புஸ்பலாதேவி**

**(யா/நாமகள் வித்தியாலயம் கொக்குவில்)**

**23.01.2024**


எம் ஆருயிர் தெய்வமே - நீ
இவ்வுலகைவிட்டுச் சென்று
வருடம் ஒன்று ஆனதம்மா
உன் பிரிவு எமை முள்ளாய் வகுடுதம்மா
உன் சேவையினை உளமார ஆற்றினாய்
உன் உறவுகளுக்கு உன்னத வழிகாட்டினாய்
உன் நினைவில் என்றும் வாழ்ந்து
உன் ஆத்மா சாந்தியாக பிரார்த்திப்போம்
ஆக ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**

(CS 27742) A-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 01 . 1941



மறைவு 15 . 01 . 2022

**அமரர் முருகையா நகுலேஸ்வரன்**
**(ஓய்வுபெற்ற ஆசிரியர்) திதி:- திரியோதசி**

கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் - என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகிறோம்!


**185/1, கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**021 221 6742**

(CS 53638) S-1

## மரண அறிவித்தல்

பிறப்பு . 16 . 01 . 1965



இறப்பு . 21 . 01 . 2024

### வல்லிபுரம் மயில்வாகனம்

அராலி மத்தி வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வ.மயில்வாகனம் அவர்கள் கடந்த (21.01.2024) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் குஞ்சி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற நன்னியன் பொன்னி தம்பதியரின் மருமகனும், ரதியின் அன்பு கணவரும், விமலாம்பிகை (அம்பிகா, பிரதேச செயலகம் காரை நகர்), குகதாஸ் சிந்தாம்பிகை (சிந்து), அமலதாஸ் (டுபாய்), அருள்தாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், வண்ணகுமார், அமிரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டிகாசின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**மனைவி. பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**T.P:077 660 3563**

(CR 41610) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் . 22 . 12 . 1949



மறைவு . 22 . 01 . 2024

### சதாசிவம் சண்முகலிங்கம்

**(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதியர் - வவுனியா)**

நம்பித்தாவத்தை. பொலிகண்டியைச் சேர்ந்த சதாசிவம் - சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (22.01.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சதாசிவம் - பொன்னுக்கண்டு தம்பதிகளின் செல்வப் புதல்வரும், காலஞ்சென்ற மீனாட்சி சுந்தரம் - தங்கமணி தம்பதிகளின் மூத்த மருமகனும், பத்மலோஜினியின் அன்புக் கணவரும், காண்டீபன் (நிதிக்கட்டுப்பாட்டாளர், Global Vinyl (Pvt) Ltd), வாசுகி (ஆசிரியர், பம்பலப்பிட்டி St.Marys Tamil maha Vidyalayam), கஸ்தூரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தாரணி (முகாமையாளர், இலங்கை வங்கி, இரத்மலானை), உமாமகேசன் (பொறியியலாளர்), கௌரிசங்கர் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தஸ்விதன், கோபிகன், பிரதிக்ஷா, அபிலோஜன், ஹரிஸ், நிதிஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் கணேசலிங்கம், சுந்தரலிங்கம் (ஜேர்மனி), யோகலிங்கம் (அமரர்), தேசோமயானந்தம், கௌரிதேவி, கலாராணி யோகேஸ்வரன் (ஆசிரியர், வல்லை மகளிர் மகா வித்தியாலயம்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி, சறோஜினி, தேசோமயானந்தம், யோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், சிவசெல்வநாதன், சொர்ணகாந்தரூபி, தேசிங்கராணி, மீனலோகினி (அமரர்), ஜெயமணி, வளர்மதி, சிவசெந்திவேல் (அமரர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நடராஜா, விஜயகுமார், செல்வநேசன், சிவநடாரசா, குகனொளி, பவானி, பவனேஸ்வரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2024) செவ்வாய்க்கிழமை நம்பித்தாவத்தை, பொலிகண்டியிலுள்ள அவரது இல்லத்தில் காலை 09.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காண்டீபன் - 077 786 2045**
**உமா மகேசன் - 077 198 0400**

**தகவல்:**
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CS 26585) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOBILE

# SLTMOBITEL

# உபஹார

## 15 ஆம் ஆண்டு பூர்த்தி விழா



**எல்லையற்ற அர்ப்பணிப்புடன் சேவையாற்றும்
அரச பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உங்களுக்காக**

பல நன்மைகளுடன் உங்களை மேலும் வலுவூட்டும்
விஷேட குறைந்த கட்டணங்களுடனான பிற்கொடுப்பனவு பெக்கேஜ்கள்

| ரூ. 499/- (+வரிகள்) மாதாந்தம் | |
|---|---|
| Anytime DATA **15GB** (512MB/நாளாந்தம்) | நிமிடங்கள் மற்றும் SMS **1000** (எந்த வலையமைப்பிற்கும்) |
| **10GB** Teams, Meet, zoom, Office 365 | **7.5GB** (256MB/நாளாந்தம்) WhatsApp, Google Maps, Waze |
| இணைப்புக் கட்டணம் ரூ.750/- | |

| ரூ. 727/- (+வரிகள்) மாதாந்தம் | |
|---|---|
| Anytime DATA **30GB** (1GB/நாளாந்தம்) | நிமிடங்கள் மற்றும் SMS **1000** (எந்த வலையமைப்பிற்கும்) |
| **10GB** Teams, Meet, zoom, Office 365 | **7.5GB** (256MB/நாளாந்தம்) WhatsApp, Google Maps, Waze |
| இணைப்புக் கட்டணம் ரூ.1000/- | |

- ஒரு தே. அ. அட்டைக்கு ஒவ்வொரு பெக்கேஜிலிருந்தும் 2 இணைப்புகள் வீதம் பெற்றுக் கொள்ள முடியும்.
- SIM இலவசம்

உங்களுக்கு தேவையான பெக்கேஜினைப் பெற்றுக் கொள்ள அருகிலுள்ள SLT-MOBITEL கிளைக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் வருகை தாருங்கள்.

தேவையான ஆவணங்கள் - தேசிய அடையாள அட்டை, பணியாளர் அடையாள அட்டை அல்லது உறுதிப்படுத்தல் ஆவணம் அல்லது பணி ஓய்வு அடையாள அட்டை.

**1717**இற்கு அழைத்து இன்றே எம்முடன் இணைந்து கொள்ளுங்கள் www.sltmobitel.lk

நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/M/PRO/24/01

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

நீர்வேலி, ஜன. 23

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் ஸ்ரீ மகாலட்சுமி, சந்தானகோபாலர் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7.30 மணி முதல் காலை 8 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமானது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மேற்படி ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

* * * *

கோண்டாவில், ஜன.23

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ மகாகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை அதிகாலை 5.45 மணி முதல் காலை 7.37 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியை கள் நேற்று திங்கட்கிழமை 22 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகியது. இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்த முடியுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

## யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு!

திருகோணமலை, ஜன.23

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்பிமோட்டை வயல் நிலப்பகுதியில் யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றுள்ளது. வயலில் காவலுக்குச் சென்ற வட்டமடு,ஆயிலியடி எனும் முகவரியைச் சேர்ந்த அப்துல் சாீப் முஹம்மது ஏகூப் (வயது-67) என்பவரே யானை தாக்கி உயிரிழந்துள்ளாரென ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வான் எல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப)



### கும்பாபிஷேகப் பெருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை புதன்கிழமை காலை 9.38 மணி முதல் மு.ப.11.20 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் திகதி இரவு ஆரம்பமானது.

நேற்றுத் திங்கட்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் திரண்டு வந்து எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவத்தில் கலந்துகொண்டனர். இதனால் இன்று செவ்வாய்க்கிழமையும் அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)


## அலங்கார உற்சவம்

கொக்குவில், ஜன.23

கொக்குவில் கிழக்கு, கோணாவளை வைரவர் சுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவ விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்தும் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆலய அலங்கார உற்சவ காலப் பகுதியில் தினமும் மாலை 4.30 மணிக்கு அபிஷேகம், மாலை 5.30 மணிக்கு பூசை, வசந்தமண்டபப் பூசை என்பவற்றைத் தொடர்ந்து வைரவப் பெருமான் உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 03.02.2023 அன்று
இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் தம்பிராசா மகாலிங்கம்**

திதி: பூர்வபக்க திரயோதசி (23.01.2024)

ஓராண்டு கடந்தாலும் ஓராயிரம் கவலைகள்
ஆறாத வடுவாய் ஆழ்மனதில் உள்ளதையா!
நித்திரையில் வந்து நிம்மதியாய் சில வார்த்தைகள்
கண் திறந்து பார்த்தால் கனவாக மாறியது ஏனோ?
உங்களை காணாமல் உள்ளங்களும் தேடுகிறது
எமை விட்டுப் பிரிந்தாலும் எம் நினைவுகளுள்
வாழ்கிறீர்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம் 31.03.1941 மறைவு 03.02.2023

18, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். கோப்பாய் பகுதியிலுள்ள உயர் அதிகாரி ஒருவரின் வீட்டுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. (பகல்,இரவு)

தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் நேரில்.

077 120 9998

## வேலைக்கு ஆள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு பொருட்கள் பொதி செய்ய நல்ல அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 628 0685

## 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 24.06.1946 விண்ணில் 24.12.2023


**சுப்பையா இராசையா**

எங்கள் அன்புத் தெய்வம் அப்பா
நாம் நினைக்காத பொழுதில் எமை
விட்டுப் பிரிந்தீர்கள் - இன்று மட்டுமல்ல
என்றும் உம் நெஞ்சமதில் நீங்காத தெய்வம்
அப்பா நீங்கள் எவ்வளவோ துன்பங்களிற்குப் பிறகும்
தைரியமாய் எமை வளர்த்து வாழவைத்த அப்பாவுக்கு
நிகரான தெய்வம் நீங்கள் மட்டுமே அப்பா!
எம் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்
077 415 1947

தகவல்:
S.பவநாதன் (மருமகன்)
நாதன் ரெக்ஸ் உரிமையாளர்.

## மரண அறிவித்தல்



**ரொம் சாமுவேல் பிரான்சிஸ் - சேவியர் (பட்டாஸ் மாமா செபம்)**

(ரஸ்மி சவுண்ட் சேவிஸ் உரிமையாளர், இலங்கை மின்சார சபை முன்னாள் G-I Forman)

கோவில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல 443, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ரொம் சாமுவேல் பிரான்சிஸ் சேவியர் (பட்டாஸ் மாமா) அவர்கள் கடந்த (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ரொம் சாமுவேல் எலிசெபத் "சின்னம்மா" தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசேந்திரம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வசந்தாதேவி "பேபி" அவர்களின் அன்புக் கணவரும், தர்சினி, சதீஸ்வரன் (பிரான்ஸ்), மதிஸ்வரன் ("குட்டித்தம்பி") ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகலாவின் அன்பு மாமனாரும், றொசான், தணஞ்சியா ஆகியோரின் பாசமிகு பேரனும், ராசாத்தி, விஜயன், அன்பு மற்றும் காலஞ்சென்றவர்களான குணம், நவம், செல்வம், துரை, அரசு ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பணி எதிர்வரும் (24.01.2024) புதன்கிழமை ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள புனித "சவேரியார் ஆலயத்தில்" பிற்பகல் 03.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 350 8100, 077 404 9034
021 222 6246

(CR 41613) S-1

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சித்...

நடந்துள்ளது. பெலியத்த பகுதியில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் அபே ஜன பலவேகய (எமது மக்கள் சக்தி) கட்சியின் தலைவரான சமன் பெரேரா கொல்லப்பட்டுள்ளார் என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தங்காலை நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையொன்றுக்காக சமன் பெரேரா உட்பட ஐவர் வெள்ளை நிற டிபெண்டரில் பயணித்துள்ளனர். தெற்கு அதிவேக வீதியின் பெலியத்த வெளியேறும் பகுதிக்கு அருகில் காலை உணவை உண்பதற்காக வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

அவர்களின் டிப்பெண்டரை பின்தொடர்ந்து வந்த பச்சை நிற பஜிரோவில் இருந்தவர்கள், சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். சாரதியைத் தவிர ஏனையோர் வாகனத்தில் இருந்து இறங்கித் தப்பியோட முற்பட்டுள்ளனர். அவர்களைத் துரத்திச்சென்று சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே நால்வரும், தங்காலை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் ஒருவரும் பலியாகியுள்ளனர். சாரதி டிப்பெண்டருக்குள்ளேயே உயிரிழந்தார். பெந்தொட்ட, இதுரவ, குருநாகலை மற்றும் தெமட்டகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இது பாதாளக் குழுவின் வேலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சந்தேகநபர்களை கைது செய்வதற்காக ஆறு பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள கொஸ்கொட சுஜி என்ற பாதாள குழு உறுப்பினரின் ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது. ரி-56 ரகத் துப்பாக்கியே தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.



**வீட்டில் சல்லடை**

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு பிறகு, குருநாகலில் உள்ள சமன் பெரேராவின் வீட்டில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சமன் பெரேரா குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்காக சிறைத் தண்டனையை எதிர்கொண்ட நபர். அவரது வீட்டில் ஆயுதங்கள் உள்ளனவா என்ற நோக்கிலேயே சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும், சந்தேகத்துக்கிடமாக எந்தப்பொருளும் சிக்கவில்லை.

கடந்த பொதுத்தேர்தலில் அபே சன பலவேகய கட்சி போட்டியிட்டது. அந்தக் கட்சிக்கு ஒரு தேசிய பட்டியல் ஆசனம் கிடைத்தது. அந்தத் தேசியப்பட்டியல் ஊடாக அத்துரெலிய ரத்ன தேரர் நாடாளுமன்றம் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-44)



# விபத்தில் சிக்கி இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 23

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பட்டாரக வாகனமொன்றை மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முற்பட்ட வேளை, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-27.9)

## இலங்கை மீது...

இலங்கையில் மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் இராணுவத்தின் வலுவான அணுகுமுறை உள்ளது என்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்று ஐக்கிய மனித உரிமைகள் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஓரங்கட்டப்பட்ட சமூகப்பொருளாதார குழுக்களில் இருந்து ஆயிரக்கணக்கான போதைப்பொருள் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் நூற்றுக்கணக்கானோர் இராணுவத்தால் நடத்தப்படும் கட்டாய புனர்வாழ்வு மையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியது.

'யுக்திய' எனப்படும் பாதுகாப்பு நடவடிக்கையின்போது சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக மனித உரிமை பேரவைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மறுவாழ்வு என்பது தீங்கு குறைக்கும் கண்ணோட்டத்தில் செய்யப்படவேண்டும். கட்டாய மறுவாழ்வு மையங்கள் உடனடியாக மூடப்பட்டு, வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாக அவை மாற்றப்படவேண்டும். அதற்குப் பதிலாக தன்னார்வ புனர்வாழ்வுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும்.

போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வு அல்லது நடவடிக்கைகள் எடுக்கப்படும் இலங்கைச் சட்டம் தொடர்பாக மனித உரிமைகள் பேரவை கவலையையும் வெளிப்படுத்தியுள்ளது - என்றுள்ளது. (அ-எ-இ)

## ஒரு வாரத்தில்...

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.ஜெயபிரதீப் தலைமையில் அந்தப் பகுதி கிராமசேவையாளர், டெங்குத் தடுப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து வீட்டுத் தரிசிப்பில் ஈடுபட்டனர். டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 23 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டது.

நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட வளாகக் குடியிருப்பாளர்கள் நால்வருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் மூவர் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து , அவர்களுக்குத் தலா 4 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மன்றில் முன்னிலையாகாத குடியிருப்பாளருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

நுளம்பு பரவக் கூடிய சூழல் காணப்பட்ட வெற்றுக் காணி உரிமையாளர்களுக்கு, அந்தக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு 7 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## பொலிஸாரால்...

துள்ளது. குற்றச்செயல்களுக்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் விதம் தொடர்பாக விமர்சனங்கள் வெளியாகியுள்ள போதும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அதைத் தொடர்வதில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

போதைப்பொருள் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிராக அவசியமான சட்ட நடைமுறையாக்கல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ளபோதும், அவற்றை உரிய சட்ட நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-எ-இ)

## தமிழர்களின்...

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலையாவது நடத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், நிதிப் பற்றாக்குறையை அரசாங்கம் காரணம் காட்டினால் அந்த நிதியை வழங்க இந்தியா ஆவன செய்யவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி. சிறீதரன், மூத்த தலைவர்களான இரா.சம்பந்தன், மாவை சோ.சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், வினோநோகராதலிங்கம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ-எ-இ)

## தவறான...

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை நடந்துள்ளது. மட்டுவில் தோப்பு வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவசிவா (வயது - 47) மற்றும் நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த தயாபிரின்ஸ் டயானா (வயது-46) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ச-9)

## பதவி...

ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. போராட்டத்தில் கலந்துகொண்ட 66 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்தநிலையில், இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் 5 ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் பதவி விலகல் கடிதத்தைக் கையளிக்கத் தீர்மானித்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப் பின்னணியிலேயே மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தனது ருவிற்றர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

பதவி விலகல் கடிதங்களைத் தயக்கமின்றி ஏற்கும்படியும், பதவி விலகுபவர்கள் நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய அனைத்து நிலுவைகளையும் வசூலிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் சீர்திருத்தங்கள் தொடர்பான பணிகளைத் துரிதப்படுத்தவும் மின்சார சபை நிர்வாகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## போராட்டம்...

நாடு வங்குரோத்து அடைந்தது. அதை உயர்நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியுள்ளது. அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு நாட்டு மக்கள் விரைவில் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் மின்சாரசபையின் சேவையாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். மின்சாரசபை சேவையாளர்களின் வருமானம் மற்றும் அவர்களுக்கான இதர கொடுப்பனவு தொடர்பாக மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார் என்றும் ரஞ்சன் ஜயலால் குறிப்பிட்டார். (அ-எ-இ)

## விபத்தில்...

குள்ளாகின. மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞரே படுகாயமடைந்தார். படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்துத் தொடர்பான விசாரணைகள் அச்சுவேலிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது. (அ-எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம்

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மஹா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக்கிரியைகள் நேற்றுத்திங்கட்கிழமை காலை ஆரம்பமாகியது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-17)

## பொதுக்கூட்டம்

கருகம்பனை சனசமூக நிலையத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் அண்மையில் கீரிமலையில் அமைந்துள்ள கருகம்பனை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. தலைவராக ச.லக்ஷ்னும், செயலாளராக ஜெ.ஜெயப்பிரதாபனும், பொருளாளராக நா.ஜெயகாந்தனும், உபதலைவராக இ.ஜெயக்குமாரும், உப செயலாளராக ப.ராகுலனும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் 10 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ப-66)


## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட் றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல் போன்ற வேலைகளில் மிகவும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:
077 649 1027

## உடனடி வேலை வாய்ப்புகள்

யாழ்நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்திற்கு
**J.P.Y Fashion Club (Pvt) Ltd**
அனுபவம் உள்ள, பழக விரும்பும் பெண் விற்பனையாளர் உடன் தேவை.

- சம்பளம் - 35000 + Bonos
- வயது: 18 - 25 வரை
- வேலை நேரம் : காலை 9.00 - இரவு 8.00 வரை
- மதிய உணவும், தங்குமிட வசதிகளும் கொடுக்கப்படும்

**077 404 9277, 021 222 2789**

## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

*** Waiter**

குறிப்பு:- தூர இடங்களில் வசிப்போருக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 407 8235, 077 712 3501**


### அறிவித்தல்
### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக ஆளுகைக்குட்பட்ட வட்டாரம் 1 (கிராம சேவகர் பிரிவுகள் J/150, J/151, J/152) வட்டாரம் 2 (கிராம சேவகர் பிரிவுகள் J/154, J/155, வட்டாரம் 3 (கிராம சேவகர் பிரிவுகள் J/153, J/156) வட்டாரம் 8 (கிராம சேவகர் பிரிவு J/144, ஆகிய பிரிவுகளிலுள்ள ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மீள்வரி மதிப்பீட்டு நிரலானது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகலில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. வரியிறுப்பாளர்கள் 01.02.2024 ஆம் திகதி வரை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தமது மீள் மதிப்பீட்டு நிரலை பரிசோதிக்கலாம் என்பதனை அறியத்தருகிறேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
23.01.2024
(CS 41612) V-1

## சேவைநலன் பாராட்டும் 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்




யா/ அளவெட்டி வடக்கு
அ.மி.த.க. பாடசாலையில் ஆசிரியப்பணியிலிருந்து
23.01.2024 இன்று ஓய்வுபெறும்

**திருமதி புனிதவதி சேனாதிராசா**

அவர்களது ஆசிரியசேவையைப் பாராட்டி ஓய்வுக்காலம் சிறப்பாகவும் ஆரோக்கியமாகவும் குடும்பத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**சேவை காலம்**

யா/ ஊர்காவற்றுறை புனித மரியாள் பாடசாலை
07.03.1989 - 05.10.1993
யா/ புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் பாடசாலை
06.10.1993 - 29.01.1995
யா / கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
30.01.1995 - 31.12.1996
யா / கரம்பொன் சண்முக நாதன் மகாவித்தியாலயம்
01.01.1997 - 14.02.2001
யா / சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
15.02.2001 - 14.02.2010
யா / அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை
15.02.2010 - 23.01.2024 வரை.

வாழ்த்துவோர்: **அதியர், ஆசிரியர்கள்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 10 . 1952



மறைவு 21 . 01 . 2024

**ஞானப்பிரகாசம் மரியசீலன்**

மன்னாரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு ஞானப்பிரகாசம் மரியசீலன் அவர்கள் கடந்த (21.01.2024) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் அந்தோனிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜலிங்கம் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சிதாதேவி அவர்களின் அன்புக் கணவரும், ஷாலினி, றஜீவன் ஆகியோாரின் பாசமிகு தந்தையும், மேரிபொலின், மரிய ஜோசப், மரிய பத்மன், மரிய கிறிஸ்ரபல் நோயல், மரிய செலஸ்ரின், மரிய சேவியர் ஆகியோரின் சகோதரரும், சரோஜாதேவி, வசந்தாதேவி, சாந்தினிதேவி, சிவராஜன், ரஜிதா ஆகியோரின் மைத்துனரும், பிரபாகரன், லக்கியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரத்தியா, ஆதிரா, அதிதி ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2024) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மன்னார் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

இல - 126, மூர் வீதி,
மன்னார்.
076 946 7020

தகவல்:
**குடும்பத்தினர்.**
(CS 53633) S-1

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.12.2023 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குலசாமி
**அமரர் வேலுப்பிள்ளை குமாரசாமி (சந்திரன்)**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (22.01.2024) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (24.01.2024) புதன்கிழமை காலை வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்க ளும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக் கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவநகர்,
7 ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

**குடும்பத்தினர்.**
தொ.பே. 077 109 2169



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org